நிர்வாகம் சரியாக நடக்கவில்லை என்று சொல்லியும், இது போன்ற பல குற்றச்சாட்டுக்களைக் கூறிய பிறகும், செக்ஷன் 65-ன் பிரகாரம் அவர்கள் கொடுக்கப்பட்ட நோட்டீசுக்கு பதில் இருக்கிறதா? இதே போன்று மற்ற சொசைட்டிகளுக்கும் இப்படிப்பட்ட கால நீட்டிப்பு கொடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சங்கத்தைப் பொறுத்த வரைக்கும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போலவே 30—6—1975-ல் 3 டைரக்டர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டும், அவர்கள் தவறுதலாக தொடர்ந்து பணியில் இருப்பதைக் கண்டுபிடித்து அரசு தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறது. மகாசபைக் கூட்டத்தைப் பொறுத்தவரைக்கும் 26—6—1978 அன்றும் 26—12—1980 தேதிகளில் மகாசபைக் கூட்டம் நடந்திருக்கின்றது. அவர்கள் தவறு செய்தார்கள் என்று கண்டு பிடிக்கப்பட்டு 30—6—1975-லே நோட்டீஸ் கொடுக்கப்பட்டு, அவர்களுடைய பதில் பெறப்பட்டு, அந்த நிர்வாகம் கலைக்கப் படக்கூடிய ஆய்வு தற்போது இருக்கின்றது.

திரு செ. சிவசாமி : தலைவர் அவர்களே, 65 செக்ஷன் என்குயரி பிரகாரம் கலைக்கப்பட வேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அதன்படி கலைக்க ஏற்பாடு செய்வதாக சொல்லப்பட்டது. ஆனால் இந்தநாள் வரையில் அந்த சொசைட்டி இயங்கிக் கொண்டு இருக்கின்றது. அதை உடனடியாகக்கலைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, That being an independen enquiry by an independent authority அரசே கலைக்க வேண்டுமென்று உத்தரவிட முடியாது. அரசைப் பொறுத்த வரைக்கும் ஆதாரங்கள் அடிப்படையில் நடவடிக்கை எடுங்கள், ஆய்ந்து நடவடிக்கை எடுங்கள். ஷோ காஸ் நோட்டீஸ் கொடுத்து எடுங்கள் என்றுதான் சொல்ல முடியும். சட்டமும் அப்படித்தான் இருக்கிறது. சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது, இந்த சட்டப்படி எடுக்கப்பட்டிருக்கின்ற நடவடிக்கையினால் சங்கம் கலைக்கப்பட ஆய்வு இருக்கிறது என்பது தகவலிலிருந்து அரசு அறிகிறது. அதைத்தான் சொன்னேன்.

திருச்சி மாவட்டத்திற்கு கூடுதல் மாவட்ட நீதிமன்றம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 594—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழக்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

திருச்சி மாவட்டத்திற்குக் கூடுதல் மூன்றாவது மாவட்ட நீதிமன்றம் District and Sessions Cour அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆம்.

1982 மார்ச் 22]

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திற்கு கூடுதல் மூன்றாவது மாவட்ட நீதிமன்றம் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். திருச்சி மாவட்டத்தில் திருச்சி நகரத்திற்கு அடுத்தபடியாக இருக்கிற நகரம் கரூர். எல்லா தகுதியையும் பெற்றிருக்கின்ற அந்தக் கரூர் நகரத்தில் இந்த நீதி மன்றம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலே இருக்கின்ற பல்வேறு நீதி மன்றங்களின் அமைப்புகள், வழக்குகளுடைய தன்மையையும் வழக்குகளுடைய எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் அங்கு அமைக்கலாம் என அரசு உயர்நீதி மன்றத்தைக் கேட்டு இருக்கிறது. உயர் நீதிமன்றத்தின் பரிந்துரை அரசுக்கு வந்தவுடன் அந்தப் பரிந்துரையின் அடிப் படையில் அமைக்கப்படும்.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூரில் ஏற்கனவே, ஒரு துணை மாவட்ட நீதிமன்றம் உருவாக்கக்கூடிய அளவிற்கு ஸ்டாடிஸ்டிக்ஸ் எல்லாம் இருக்கிறது. ஆகவே, கரூருக்கு ஒரு மாவட்ட நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கை நீண்ட நெடுங் காலமாக அந்தப் பகுதி மக்களிடையே இருக்கிறது. ஆகவே, அவர்கள் சார்பில் அந்தக் கோரிக்கையை நான் வைக் கிறேன். இதை அரசு கவனிக்குமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப் படுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிவு, கனிவு ஆகியவற்றின் அடிப்படை யில் நடவடிக்கை எடுப்பது சிரமம். காரணம் புள்ளி விவரங் களின் அடிப்படையில்தான் நடவடிக்கை எடுக்க முடியும். உயர் நீதிமன்றம் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் என்ன பரிந்துரை செய்கிறதோ, அந்தப் பரிந்துரையை அரசு நடை முறைப்படுத்தும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தினை அரசு உயர்நீதிமன்றத்திற்குச் சொல்லும்.

திரு. பி.எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலே ஒரு டிஸ்டிரிக்ட் கோர்ட்டும், குளித்தலையிலே ஒரு சப்-கோர்ட்டும் அமைக்க ஒரு முயற்சி செய்யப்பட்டு வருவதாக அறிகிறேன். ஆகவே அந்த சப்—கோர்ட்டு குளித்தலையில் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறையில் ஒரு டிஸ்ட்டிக் கோர்ட் அமைக்கப்பட்ட பிறகு, குளித்தலையில் சென்ட்ரல்

பிளேஸ் ஆக வரும் என்ற நிலை இருக்கின்ற காரணத்தால் சப்-கோர்ட்டு ஒன்று அங்கு அமைப்பது உகந்ததாக இருக்கும் என்று அரசு கருதி உள்ளது. நீதிமன்றத்தினுடைய ஆலோசனையைக் கேட்டு இருக்கிறது. உயர் நீதிமன்றத்தினுடைய ஆலோசனை வந்தபிறகுதான் அதைப்பற்றி அரசு முடிவு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[*குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

(2) ஒத்திவைப்புத் தீர்மானம்.

பாளையங்கோட்டை அருகில் ஓர் அரிசன கிறிஸ்தவர் கொலை செய்யப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள், எல். இளையபெருமாள், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன், ஜே. ஹேமச்சந்திரன், ஆகியோர், ''திருநெல்வேலி மாவட்டம், சமாதானபுரம், பாளையங்கோட்டை நகர்ப் பகுதியிலுள்ள திரு. செல்வதுரை என்பவர், 26-2-82 அன்று கொலை செய்யப்பட்டு இருப்பதனால் பாளையங்கோட்டைப் பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி திரு. இளையபெருமாள் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சம்பவத்திற்கு முன்பாக 80 ஆம் ஆண்டிலே, 81-ஆம் ஆண்டிலே தொடக்கப்பட்ட சங்கனாம்குளம், திருநெல்வேலி மாவட்டம் சங்கநாங்குளம் என்ற கிராமத்தில் ஏழை ஆதி திராவிடர்கள் அடிக்கப்பட்டும். பெண்கள் அவமானப்படுத்தப்பட்டும் இருந்தது. இதை அரசுக்கு நான் தெரிவித்து இருந்தேன். நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும் நேரிலே சென்று அதனுடைய உண்மையான நிலையைக் கண்டு, ஒரு நீதிவிசாரணை அமைத்தார்கள். அந்த நீதி விசாரணையிலே இந்த இறந்து போன செல்வதுரை என்பவர் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை நகரத்தை சேர்ந்தவர் அவர் முன்நின்று பல விஷயங்களை அந்த

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS